# இயல் 6.2 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 6.2.2.1.D

பன்முகத்திறனறிதல் - சமன்பாடுகள்

## வினா எண் :: 1

36 செ.மீ நீளமுள்ள ஒரு கம்பியைக்கொண்டு ஒரு சமபக்க முக்கோணம் அமைத்தால் அதன் ஒரு பக்கத்தின் நீளமென்ன?
அதே கம்பியைக்கொண்டு ஒரு சதுரம் அமைத்தால் அதன் ஒரு பக்கத்தின் நீளமென்ன?




சமபக்க முக்கோணத்தின் பண்புகளில் ஒன்று என்னவென்றால் அதன் 3 பக்கங்களும் சம நீளம் உள்ளவை. ஒரு கம்பியைக்கொண்டு ஒரு சம பக்க முக்கோணம் அமைத்தால் அந்த முக்கோணத்தின் மூன்று பக்கங்களின் கூட்டுத்தொகை அந்த கம்பியின் மொத்த நீளமாக இருக்க வேண்டும். எனவே, கம்பியின் நீளத்தை 3-ஆல் வகுத்தால் நமக்கு அந்த சம பக்க முக்கோணத்தின் ஒரு பக்கத்தின் நீளம் கிடைத்துவிடும்.

அதேபோல், ஒரு சதுரத்தின் பண்புகளில் ஒன்று என்னவென்றால் அதன் 4 பக்கங்களும் சம நீளம் உள்ளவை. ஒரு கம்பியைக்கொண்டு ஒரு சதுரம் அமைத்தால் அந்த சதுரத்தின் 4 பக்கங்களின் கூட்டுத்தொகை அந்த கம்பியின் மொத்த நீளமாக இருக்க வேண்டும். எனவே, கம்பியின் நீளத்தை 4-ஆல் வகுத்தால் நமக்கு அந்த சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் கிடைத்துவிடும்.

முக்கோணத்தின் பக்கம் $= x$

சதுரத்தின் பக்கம் $= y$

## விடைப்படிகள்

| | |
|---|---|
| $3x = 36$ | $4y = 36$ |
| $x = 36/3 \quad = 12$ செ.மீ | $y = 36/4 \quad = 9$ செ.மீ |

## விடை

முக்கோணத்தின் ஒரு பக்கத்தின் அளவு $(x) = 12$ செ.மீ

சதுரத்தின் ஒரு பக்கத்தின் அளவு $(y) = 9$ செ.மீ


Sum & solution prepared on Monday 17th May, 2021 :: 17:02 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.